சாட்சிகளின் வாக்குமூலம்
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 1/2024**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

வாக்குமூலம் – வா.சா–1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனிசாமி | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 20ம் நாள் சாட்சியம்.

---

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்கள்

1. 25.07.1991 தேதியிட்ட நாச்சிமுத்து கவுண்டர் மற்றும் 5 நபர்கள் சேர்ந்து 7ம் பிரதிவாதி திருமூர்த்திக்கு SRO திருப்பூர் ஜாயிண்ட்–1 சார் பதிவாளர் அலுவலகத்தில் செய்துகொடுத்த பொது அதிகார ஆவணம், ஆவண எண். 152/1991 சான்றிட்ட நகல்.
2. 16.02.1993 தேதியிட்ட உஷாராணி என்பவருக்கு 7ம் பிரதிவாதி திருமூர்த்தி, நாச்சிமுத்து கவுண்டர் வகையரா பவர் ஏஜெண்ட் என்ற முறையில் SRO திருப்பூர் ஜாயிண்ட்–1 சார் பதிவாளர் அலுவலகத்தில் செய்துகொடுத்த கிரைய பத்திரம், ஆவண எண். 1566/1993 அசல்.
3. 06.02.2006 தேதியிட்ட இந்திராணி என்பவருக்கு உஷாராணி என்பவர் SRO பல்லடம் சார் பதிவாளர் அலுவலகத்தில் செய்துகொடுத்த கிரைய பத்திரம் ஆவண எண்.1184/2006 அசல்.
4. 05.08.2010ம் தேதியிட்ட முருகேசன் என்பவருக்கு இந்திராணி பல்லடம் சார் பதிவாளர் அலுவலகத்தில் செய்துகொடுத்த பொது அதிகார ஆவணம் ஆவண எண். 1772/2010 அசல்.

5. 28.11.2019 தேதியிட்ட செல்வராஜ் மற்றும் முருகேசன் ஆகியோர் செய்துகொண்ட பொது அதிகார ஆவணத்தின் ரத்து பத்திர எண்.15631/2019 அசல்.

6. 28.11.2019 தேதியிட்ட வாதிக்கு செல்வராஜ் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் ஆவண எண்.15632/2019 அசல்.

7. 23.01.2023 தேதியிட்ட ஜோதிமணி என்பவருக்கு வாதி சைட் நம்பர் 51ன் மத்திய பகுதியை செய்துகொடுத்த கிரைய பத்திரம் ஆவண எண்.1192/2023 சான்றிட்ட நகல்.

8. 15.06.2023 தேதியிட்ட வேல்முருகன் என்பவருக்கு வாதி சைட் நம்பர் 51ன் வடபுற பகுதியை செய்துகொடுத்த கிரைய பத்திரம் எண்.10671/2023 சான்றிட்ட நகல்.

9. வாதியின் பெயரில் உள்ள க.ச.487/18 பட்டா எண்.5056ன் சிட்டா கணினி பதிவிறக்க நகல்.

10. தாவா சொத்தின் புல வரைபடம் சான்றிட்ட நகல்.

11. நாச்சிமுத்து கவுண்டரின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல்.

12. 09.11.2011 தேதியிட்ட பஞ்சாயத்து தலைவர் கரைப்புதூர் பஞ்சாயத்து அவர்களுக்கு நாச்சிமுத்து கவுண்டர் வகையராவின் பவர் ஏஜெண்ட் என்ற முறையில் 7ம் பிரதிவாதி ரோடு குறித்து செய்துகொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் எண். 21670/2011 சான்றிட்ட நகல்.

13. 17.02.2016 தேதியிட்ட சின்னப்பன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுத்தடத்தை ஆக்கிரமிப்பு செய்ததை எதிர்த்து தாக்கல் செய்த ரிட் மனுவின் உத்தரவு, ரிட் மனு எண்.5787/2016 கணினி பதிவிறக்க நகல்.

14. 15.11.2016 தேதியிட்ட சின்னப்பன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனு எண்.33948/2016ன் உத்தரவு கணினி பதிவிறக்க நகல்.

15. 27.02.2020 தேதியிட்ட 4ம் பிரதிவாதி தாவா சொத்தான சைட் நம்பர் 51க்கு கொடுத்த மனை வரன்முறை உத்தரவு அசல்.

ஆகியவற்றை வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஆவணங்கள் முறையே **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.15** ஆவணங்கள் ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2026.02.20 18:27:25 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.